கட்ட அனுமதி வழங்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆடுதுறை இரயில்வே கடவில் உயர்மட்டப் பாலம் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்கள். அங்கே ஆய்வு செய்து, அந்த ஆய்வில் ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளுக்குமேல் வாகனங்கள் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மத்திய இரயில்வே துறையினரின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அதற்குண்டான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

230—

பிரட் தொழிற்சாலை

***51350 திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் பிரட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதியில் பிரட் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு மானியங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.*

முற்பகல் 10-30

திருமதி எஸ். கணிதா சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் எதிரில் இமயமலை நடந்து வந்தால் என் தாயைப் பார்த்து தலை வணங்கும்; வங்காள விரிகுடாவோ என் தாய் நடக்கும் பாதைக்கு மலர் போன்ற விரிப்பாகும்; அகிலம் எல்லாம் உருகிச் சொல்லும் வார்த்தை அம்மா, அம்மா. எம் அம்மாவைத் தவிர மற்றவர்கள் எல்லாம் சும்மா, சும்மா என்று சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டு வணங்குகிறேன். மதுராந்தகம் தொகுதியில் தொழில்முனைவோர்கள் முன்வந்தால் பிரட் தொழிற்சாலை அமைப்பதற்கு மானியம் வழங்கப்படும் என்று தெரிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படிச் செய்து கொடுக்கும்பட்சத்தில், அது என் தொகுதி மக்களின் வேலைவாய்ப்புக்கும் ஏதுவாக இருக்கும் என்று கூறி, அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 231, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

231—

புதிய கட்டடம்

***53120—திரு. என்.வி. காமராஜ்:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேதாரண்யம் தொகுதியிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?